# ஜிஎஸ்டி வரி உயர்வு: உழைக்கும் மக்களின் குரல்வளையை நெறிக்கும் பாசிச தூக்குக்கயிறு!

## தமிழகம் தழுவிய

# ஆர்ப்பாட்டம்,பிரச்சார இயக்கம்

**அன்பார்ந்த உழைக்கும் மக்களே!**

இதுவரை வரி விதிக்கப்படாமல் இருந்த பல்வேறு அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளை வரி வலைக்குள் இழுத்துள்ளதோடு, பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு விதிக்கப்பட்டிருந்த வரிகளை பாசிச மோடி கும்பல் உயர்த்தியுள்ளது. இதன் மூலம், ஏற்கனவே இந்திய மக்களின் கழுத்தை நெறித்துக் கொண்டிருக்கும் சுருக்குக்கயிற்றை மேலும் ஒருசுற்று இறுக்கியுள்ளது.

தயிர், மாவு, மோர், உணவு தானியங்கள், அரிசி, கோதுமை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கு 5 சதவீதம் விதித்தும், பென்சில், பேனா,ரப்பர், நோட்டுப் புத்தகங்கள் முதலான கல்விசார்ந்த உபகரணங்கள், எல்.இ.டி விளக்குகள், கத்திகள், போன்ற பொருட்களுக்கான வரியை 12 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக உயர்த்தியும், வங்கி காசோசலைகளுக்கு 18 சதவீதவரி விதித்தும், எரியூட்டும் தகன இயந்திரத்திற்கும் கூட வரி விதித்து காவி கார்ப்பரேட் கும்பல் உத்திரவிட்டுள்ளது.

அத்துக்கூலிக்கு வேலைசெய்யும் தொழிலாளர்கள், எங்கும் நிரந்தரமற்ற வேலையில் உழலும் மக்கள், வேலைகளிலிருந்து தூக்கியெறியப்பட்ட தொழிலாளர்கள், வேலைதேடி அலையும் இளைஞர்கள், படிப்புக்கு ஏற்ற வேலை கிடைக்காமல் போட்டி தேர்வு எழுதி எழுதி சோர்வுற்றிருக்கும் படித்த இளைஞர்கள், மோடியின் மக்கள் விரோத பொருளாதார கொள்கையால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவணிகர்கள், சிறுதொழில் முனைவோர்கள் என ஆகப் பெரும்பான்மை மக்கள் வாழ முடியாமல் தவித்து வரும் நிலையில் தான் இந்த வரிஉயர்வு அறிவிக்கப் பட்டுள்ளது. ஏற்கனவே பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலை உயர்வினால் உணவுப் பொருட்களின் விலை உயர்ந்துள்ள நிலையில் சிறிதும் இரக்கமின்றி ஜிஎஸ்டி வரிஉயர்வை அறிவித்துள்ளனர்.

நாட்டின் முன்னேற்றத்திற்கும் சுபிட்சத்திற்கும் இந்த வரி உயர்வு தவிர்க்க முடியாதது என்று மோடி கும்பல் கூறுகிறது. இதில் துளியளவேனும் உண்மை இருக்கிறதா? நாட்டின் நலன் என்று கூறிக்கொண்டு உழைக்கும் மக்களின் முதுகில் வரிச்சுமையை ஏற்றும் இவர்கள்தான் அதானி,அம்பானிபோன்ற முதலாளிகளுக்கு 2019ஆண்டில்1.45 லட்சம் கோடி ருபாய் வரித்தள்ளுபடி செய்துள்ளனர்.மேலும், கடந்த 8 ஆண்டுகளில் மட்டும்பொதுத்துறைவங்கிகள் மூலம்10 இலட்சம்கோடிரூபாய் கார்ப்பரேட்டுகளின் வாராக்கடன்களைத் தள்ளுபடி செய்துள்ளன. மும்பை பங்குச்சந்தையில்பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின்மொத்தலாபம்2020-21ல் 5.5 இலட்சம் கோடியிலிருந்து 2021-22ல் 9.3 இலட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. அதேவேளையில் அடித்தட்டில் உள்ள 20% மக்களின் வருமானம் 53 சதவீதமாக சரிந்துள்ளது. 2021க்கான பட்டினிபட்டியலில் இடம்பெற்ற 116 நாடுகளில் இந்தியா 101 வது தரவரிசையில் உள்ளது. கொள்ளை இலாபமடிக்கும் பெருமுதலாளிகளுக்கு வரித்தள்ளுபடி வழங்கிவிட்டு, சுரண்டலுக்கும், பட்டினிக்கும் ஆளாக்கப்படும் உழைக்கும் மக்கள் உண்ணும் உணவுப் பொருட்களுக்குகூட வரிவிதிப்பதுதான் நாட்டின் சுபிச்சத்திற்கு உகந்தது என்று கதையளக்கிறார்கள்.

கொரோனா சூழலை சமாளிக்க கார்ப்பரேட்டுகள் மீது கூடுதல் வரி விதிக்க வேண்டும் என்று பரிந்துரைத்த ‘பாவத்திற்காக’ 50 இளம் ஐ.ஆர்.எஸ். அதிகாரிகளை தூக்கியடித்து, தன் எஜமானர்களுக்கு விசுவாசத்துடன் வாலை ஆட்டியது, மோடி கும்பல். முதலாளிகள் மீது வரியை உயர்த்துவதைப் பற்றிக் கனவிலும் சிந்திக்காத மோடி அரசுதான், உழைக்கும் மக்களைக் கழுதைகளாக நினைத்து விலைவாசியையும் வரியையும் நம் முதுகில் சுமத்துகிறது. உழைக்கும் மக்களை ஒட்டச் சுரண்டுவதற்கு தொழிலாளர் சட்டத் தொகுப்பு, வேளாண்சட்டங்கள் போன்றவற்றை கொண்டுவந்து இந்தியப் பெருமுதலாளிகளுக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் சேவை செய்வதோடு மட்டுமல்லாமல் அம்மக்களுக்கு கிடைக்கும் அற்பகூலியையும் வரிபோட்டு முதலாளிகளின் கஜானாக்களை நிரப்பும் இந்த காவி-கார்ப்பரேட் கும்பல் யாருடைய நலனுக்காக சேவை செய்கிறது என்பது வெளிப்படை.

ஒருபுறம் இத்தகைய கார்ப்பரேட் பாசிச தாக்குதல்களை கட்ட விழ்த்துவிட்டு நாட்டை தீவிரமாக மறுகாலனியாக்கி வரும் பாஜக-ஆர்.எஸ்.எஸ். பாசிச கும்பல் மறுபுறம் இஸ்லாமியர்கள் தலித்துகள் அறிவுத்துறையினர் ஜனநாயக சக்திகள் மீது கொடிய பாசிச பயங்கர வாதத்தை ஏவிநாட்டை இந்து ராஷ்டிரமாக மாற்றத்துடிக்கிறது.

விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள், சிறுகுறு முதலாளிகள், சிறுபான்மையினர், தலித்துகள் என சமூகத்தின் அனைத்துப் பிரிவு மக்களின் மீதும் காவி-கார்ப்பரேட் பாசிசம் பாரபட்சமின்றி தாக்குதல் தொடுத்து நம் எதிர்காலத்தைக் கேள்விக் குறியாக்கியுள்ளது, இந்த பாசிச கும்பலுக்கு எதிராக நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராடவேண்டும். அப்படி போராடினால் மட்டுமே நமக்கு எதிர்காலம்.

**மக்கள் அதிகாரம்**

தொடர்புக்கு:தோழர்.முத்துக்குமார் மாநிலச் செயலாளர்
தமிழ்நாடு– 9790138614